بسم الله الرحمن الرحيم    نحمده ونصلّی علی رسوله الکریم    وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 4

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

21 ஜமாதியுஸ்ஸானி 1437 ஹிஜ்ரி கமரி   31 அமான் 1395 ஹிஜ்ரி ஸம்ஷி   31 மார்ச் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக. ஆமீன்

**அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான்.**
**அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

ஒருவரது பிரதிநிதியாக இருப்பவரை கலீ∴பா என்று கூறுகின்றனர். எவர் நிழலான முறையில் தூதரின் சிறப்புகளை தன்னகத்தே கொண்டவராக இருக்கின்றாரோ அவர்தான் உண்மையான பொருளின் அடிப்படையில் தூதரின் பிரதிநிதியாக இருக்க முடியும். இதன் காரணமாகவே ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கொடுங்கோல் அரசர்களுடன் தொடர்புபடுத்தி கலீ∴பா என்ற சொல்லைக் கூற விரும்பவில்லை. ஏனென்றால், கலீ∴பா உண்மையில் ரஸூலின் நிழலாக இருக்கின்றார். எந்தவொரு மனிதனும் நிரந்தரமாக எஞ்சியிருக்கப் போவதில்லை. ஆனால், முழு உலகிலுள்ளவர்களை விடவும் சிறப்பிற்குரிய முதன்மை நிலையில் இருக்கின்ற ரஸூல்மார்களின் இருப்பானது நிழலான முறையில் என்றென்றும் கியாமத் வரை நிலைத்திருக்க வேண்டும் என்று இறைவன் நாடியுள்ளான். இதற்காகவே இறைவன் கிலா∴பத்தை ஏற்படுத்தியுள்ளான். அதன் மூலம் உலகம் எந்தவொரு காலக்கட்டத்திலும் ஒருபோதும் தூதுத்துவத்தின் அருள்களிலிருந்து விலகியிருக்கக் கூடாது. (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளில் இருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான். كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَ رُسُلِىْ நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கின்றான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும் தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறு -களையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகிறான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு, மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டி விடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.

சுருக்கமாக, இறைவன் இரு விதமான வல்லமையை வெளிப்படுத்துகிறான்.

முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான்.

இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்குப் பின்னர் (அவரை பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்து விடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகிறான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகிறான்.

எனவே, கடைசி வரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தை காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாகக் கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவிலிகள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்கள் கூட துக்கத்தின் காரணமாக பைத்தியக்காரர்களைப் பான்று ஆகி விட்டார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாம் அழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அதனை காப்பாற்றி விட்டான்.

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தில் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்வான். அவர்களது அச்சத்தின் நிலையை மாற்றி அதற்கு பிறகு அமைதியினை வழங்குவான் என அவர்களிடம் செய்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றினான். அதாவது அச்சத்திற்குப் பிறகு அவர்களது பாதங்களை உறுதிப்படுத்துவதாக அவன் வாக்குறுதி அளித்திருந்தான். (அல் வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 304-305)

எனவே, அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்தில் இருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். எனவே, இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. எனவே, நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டாவது வல்லமையைக்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

உலகில் பல விஷயங்களை பல மக்களும் வீணாக காரணமின்றி பேசுகின்றனர். சில மக்கள் நகைச்சுவையாக சிலரிடம் வீணான விஷயத்தை கூறி விடுகின்றனர். அதன் காரணமாக சண்டைகளும், பிரச்சனைகளும் உருவாகின்றன. சில நேரங்களில் பயனற்ற விஷயங்கள் சபையில் பேசப்படுகின்றது. விஷயத்தை கூற வேண்டும் என்பதற்காக சிலவற்றை கூறுகின்றனர். அதில் குத்திக் காட்டுகின்ற விஷயங்களும் பேசப்படுகின்றன. அதன் காரணமாக ஒருவர் மூலம் மற்றவருக்கு துன்பம் ஏற்படுகின்றது. அல்லது எத்தகைய பயனற்ற விஷயங்கள் பேசப்படுகின்றன என்றால் அதனால் எவருக்கும் பலன் ஏற்படுவதில்லை. நேரம் மட்டுமே வீணாகின்றது. லகுவ் என்பதன் அகராதிப் பொருள் வீணான, பயனற்ற உரையாடலாகும். அல்லது சிந்திக்காமல் புரியாமல் பேசுவதாகும். பயனற்ற, முட்டாள்தனமான விஷயங்களை பேசுவதாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களை அத்தகைய வீணான விஷயங்களிலிருந்து தடுத்துள்ளான்.

நம்பிக்கை கொண்டவர் தான் நடந்து கொள்ளும் விதத்தின் மூலமாகவும் பிறருக்கு பயன்தரக்கூடியவராக இருப்பதன் மூலமாகவும் பிறருக்கு உபகாரம் செய்வதன் மூலமாகவும் பிறரது பார்வையில் நன்மதிப்பை பெற்றவராக விளங்குதவற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சில மக்கள் சாதாரண தியாகங்களை செய்து விட்டு நாங்கள் பெரிய விஷயங்கள் செய்து விட்டோம் என்று கருதுகின்றனர். சிலர் தியாகங்கள் செய்யாமலேயே தங்களது எண்ணத்தில் தியாகங்கள் செய்தவர்களாக ஆகின்றனர். அல்லது மற்றவர்கள் மீது பேருபகாரம் செய்தவர்களாக ஆகிவிடுகின்றனர். ஒரு நம்பிக்கை கொண்டவர் உண்மையான முறையில் தனக்கு நன்மை செய்தவருக்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முபல்லிக்கிற்கும் கண்ணிமிக்கவர்கள் இருக்கின்ற சபைகளில் கலந்து கொள்ளும் வகையில் புவியியல், வரலாறு, கணக்கு, மருத்துவம், உரையாடலுக்கான மரியாதைகள், சபை மரியாதைகள் போன்றவை தொடர்பான அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும். இது ஒன்றும் கடினமான பணி அல்ல. சிறிதளவு உழைத்தால் இவற்றை பெற்றுக் கொள்ளலாம். தற்கால நிலையைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். எந்த சபைக்கு நீங்கள் செல்கின்றீர்களோ அந்த சபையைப் பற்றி நன்கு தெரிந்து கொண்ட பிறகே செல்ல வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்கின்றோம். நாம் சரியான இஸ்லாமிய போதனைக்கேற்ப வாழ்க்கையை கழிக்க வேண்டும். நமக்கு இத்தகைய வாழ்க்கையை கழிப்பதற்காக எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் பக்கமே பார்க்க வேண்டியதிருக்கின்றது. அவனுடன் தொடர்பை நிலைநாட்ட வேண்டியதிருக்கின்றது.

மனிதன் தன்னைத் தானே இறைவனின் கைகளில் தந்து விடுவது தான் முன்னேற்றத்திற்குரிய வழியாகும். எந்த பக்கம் அவன் கொண்டு செல்ல விரும்புகின்றானோ அந்த பக்கம் சென்று கொண்டே இருக்க வேண்டும். எந்த மக்கள் தொழுகைக்குரிய உரிமையை செலுத்துவதில்லையோ அவர்கள் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த மக்கள் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவேன் என்று செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வில்லையோ அவர்கள் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். எந்த மக்கள் இங்கு வந்தனரோ அவர்கள் அஹ்மதிய்யத்தின் காரணமாகவே இங்கு வந்தனர். ஆனால் இங்கு வந்த பிறகு அஹ்மதிய்யத்தின் காரணமாகத் தான் இங்கு இருப்பதற்கான குடியுரிமை அவர்களுக்கு கிடைத்தது என்பதை அவர்கள் மறந்து விட்டனர். இதன் காரணமாக அவர்கள் அதிகம் அதிகமாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய முன் வர வேண்டும். ஆனால் அவர்கள் அதை மறந்து விட்டனர். சில நேரங்களில் ஆட்சேபனை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். அத்தகைய மக்கள் நல்ல இறை அடியார்களும் அல்ல.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அறிவிப்புகளிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள பல்வேறு படிப்பினை பெறத்தக்க சம்பவங்களை ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறியவாறு ஜமாஅத் சகோதரர்களுக்கு வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 26 பிப்ரவரி 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு தப்லீக் மாதம் 26 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

உலகில் பல விஷயங்களை பல மக்களும் வீணாக காரணமின்றி பேசுகின்றனர். சில மக்கள் நகைச்சுவையாக சிலரிடம் வீணான விஷயத்தைக் கூறி விடுகின்றனர். அதன் காரணமாக சண்டைகளும், பிரச்சனைகளும் உருவாகின்றன. சில நேரங்களில் பயனற்ற விஷயங்கள் சபையில் பேசப்படுகின்றது. விஷயத்தைக் கூற வேண்டும் என்பதற்காக சிலவற்றை கூறுகின்றனர். அதில் குத்திக் காட்டுகின்ற விஷயங்களும் பேசப்படுகின்றன. அதன் காரணமாக ஒருவர் மூலம் மற்றவருக்கு துன்பம் ஏற்படுகின்றது அல்லது எத்தகைய பயனற்ற விஷயங்கள் பேசப்படுகின்றன என்றால் அதனால் எவருக்கும் பலன் ஏற்படுவதில்லை. நேரம் மட்டுமே வீணாகின்றது. லகுவ் என்பதன் அகராதிப் பொருள் வீணான, பயனற்ற உரையாடலாகும். அல்லது சிந்திக்காமல் புரியாமல் பேசுவதாகும். பயனற்ற, முட்டாள்தனமான விஷயங்களை பேசுவதாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களை அத்தகைய வீணான விஷயங்களிலிருந்து தடுத்துள்ளான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் இந்த கட்டளையை விளக்கியவாறு ஓர் உதாரணத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். அதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் (25:73) وَإِذَا مَرُّوا بِاللَّغْوِ مَرُّوا كِرَامًا என்று கூறுகின்றான். நம்பிக்கை கொண்டவரின் அடையாளமாக இது கூறப்பட்டிருக்கின்றது. அவர் ஒரு வீணான விஷயத்தைப் பார்க்கும் போது அதை விட்டும் விலகி சென்று விடுகின்றார். பெண்களை உதாரணம் கூறி அன்னார் கூறுகின்றார்கள். வேதனைமிக்க விஷயம் என்னவென்றால், பெண்கள் எப்போதும் வீணான விஷயங்களின் பக்கம் சென்று விடுகின்றார்கள். இன்றைய நாட்களில் ஆண்களின் நிலையும் இப்படித்தான் இருக்கின்றது. உதாரணமாக, எவ்வித காரணமுமின்றி மற்றவர்களிடம் இந்த ஆடையை எவ்வளவு விலை கொடுத்து வாங்கினீர்கள்? போன்ற சிறு சிறு விஷயங்களை பெண்கள் கேட்கின்றனர். இதுவும் வீணான விஷயங்கள் தான். இந்த நகையை எங்கே தயார் செய்தீர்கள்? என்று கேட்கின்றனர். இவை அனைத்துமே உலக விஷயங்கள் மட்டுமே ஆகும். இதனால் எந்த பலனும் இல்லை. சில நேரங்களில் பக்கத்தில் அமர்ந்திருக்கின்ற பெண்களுக்கு இதன் தீய தாக்கங்களும் ஏற்படுகின்றன. எதுவரை அடுத்தவரின் முழு வரலாறையும் தெரிந்து கொள்வதில்லையோ அதுவரை பெண்களுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை கூறி வந்தார்கள். ஒரு பெண் மோதிரத்தை தயார் செய்தாள். ஆனால் எவரும் அவள் பக்கம் கவனம் செலுத்தவேயில்லை. அது தங்கத்தால் செய்த அழகான மோதிரமாகும். எவரும் அதை பார்க்காததால் அவள் சோர்வடைந்து இறுதியில் தனது வீட்டிற்கு தீ மூட்டினாள். மக்கள் இருந்த வீட்டில் ஏதாவது எஞ்சியிருக்கின்றதா என்று கேட்டதற்கு இந்த மோதிரத்தை தவிர எதுவுமே எஞ்சியிருக்கவில்லை என்று அவள் கூறினாள். ஒரு பெண் அவளிடம் சகோதரியே! இந்த மோதிரத்தை எப்போது நீ தயார் செய்தாய்? என்று கேட்டாள். இது மிகவும் அழகாக இருக்கிறது என்றும் கூறினாள். அதற்கு அவள், இதே விஷயத்தை முதலிலேயே நீ கேட்டிருந்தால் எனது வீடு ஏன் எரியப் போகிறது என்றாள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: குறிப்பாக இந்த பழக்கம் பெண்களிடம் மட்டும் இல்லை. மாறாக, ஆண்களிடமும் அது இருக்கின்றது. காரணமின்றி கேள்வி கேட்பர். பதில் கூறுவர். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறிய பிறகு, எங்கிருந்து வந்தீர்கள்? எங்கு செல்கின்றீர்கள்?

வருமானம் என்ன? என்றெல்லாம் கேட்க ஆரம்பித்து விடுவர். மற்றவர்களின் விவகாரங்களில் தலையிட வேண்டிய தேவை என்ன இருக்கின்றது? அவர்கள் மேற்கத்திய சமுதாயத்தினரின் உதாரணத்தை கூறியுள்ளார்கள். ஆங்கிலேயர்களின் உதாரணத்தை கூறியுள்ளார்கள். அவர்கள் ஒரு போதும் மற்றவர்களிடம் நீங்கள் எங்கு வேலை செய்கின்றீர்கள்? உங்களது வருமானம் என்ன? என்ன படித்துள்ளீர்கள்? சம்பளம் எவ்வளவு கிடைக்கின்றது? என்றெல்லாம் கேட்பதேயில்லை. அவர்கள் மற்றவர்களை துளாவுவதில்லை. (பெண்களுக்காக நிகழ்த்திய சொற்பொழிவு அன்வாருல் உலூம் தொகுதி 15, பக்கம் 397) எனவே லகுவ் என்பது மற்றவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடிய விஷயம் மட்டுமல்ல. மாறாக, பயன் தராத ஒவ்வொரு கூற்றும் வீணான விஷயமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இதற்கு இவ்வாறும் விளக்கம் கூறியுள்ளார்கள். எவ்வித இழப்பும் இடையூறும் ஏற்படுத்தாத ஒரு செயல் நிகழும் போது அதனால் எவ்வித பயனும் இல்லை என்றால் அது வீணான விஷயமாகும். நம்பிக்கை கொண்டவருக்கு அவரது பேச்சு எப்போதும் ஒரு குறிக்கோளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கின்றது. எல்லா விதமான வீணான விஷயங்களிலிருந்தும் அவர் விலகி இருக்க வேண்டும். ஆனால் நாம் ஆய்வு செய்து பார்க்கும் போது பல மக்களும் காரணமின்றி பல விஷயங்களை பேசுகின்றனர். இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள படிப்பினை தரக்கூடிய இன்னும் சில உதாரணங்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்களில் நான் எடுத்துக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நகைச்சுவையை கூறினார்கள். தெரு பெருக்கக்கூடிய ஒருவர் லாஹூரில் சென்று கொண்டிருந்தார். அவர் சுமைகளை சுமக்கும் பணியை செய்து வந்தார். அசுத்தங்களை அகற்றும் பணியையும் செய்து வந்தார். நகரத்தில் ஒரு பெரும் கூச்சல் எழுந்தது. இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களான ஆண்கள் பெண்கள் அனைவரும் அழுது கொண்டிருந்தனர். தெரு பெருக்குபவர் இவ்வாறு அழுவதற்கான காரணத்தை ஒருவரிடம் கேட்டார். அதற்கு அவர், மகாராஜா ரஞ்சீத் சிங் இறந்து விட்டதாக கூறினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அந்த காலத்தில் மிகவும் அவப்பெயரை அடைந்த சீக்கிய அரசர்களும் இருந்தனர். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நான் பலமுறை கேட்டுள்ளேன். மகாராஜா ரஞ்சீத் சீங் அவர்களது காலத்தில் அமைதி நிலைநாட்டப்பட்டது. அவர் தீமைகளைப் பெருமளவில் அகற்றியிருந்தார். முஸ்லிம்கள் மீது சீக்கியர்கள் இழைத்த கொடுமைகள் தொடர்பான சம்பவங்கள் நாட்டின் அரசாங்கம் சிறு சிறு துண்டுகளாக பிரிந்து போன அந்த காலகட்டத்தில் நிகழ்ந்தவையாகும். அப்போது அவர்கள் கொள்ளை அடித்தனர். முழு நாட்டிலும் அழிவு பரவி இருந்தது. மகாராஜா ரஞ்சீத் சிங் அவர்கள் அமைதியை நிலைநாட்டவே முயற்சி செய்து வந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களிடம் ஓரளவு நல்ல விதமாகவே நடந்து கொண்டார்கள். அவர்கள் இதற்கு மேலும் விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள். மகாராஜாவின் அமைச்சர்களில் கூட சிலர் முஸ்லிம்களாக இருந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது தந்தையார் கூட அதாவது எனது தாத்தா அவர்களும் கூட மகாராஜாவின் தளபதிகளில் ஒருவராக இருந்தார் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

பல முஸ்லிம்களும் அப்போது பெரும் பெரும் பொறுப்புகளில் இருந்தனர். அந்த ராஜாவின் காரணமாக நாட்டிற்கு கிடைத்த அமைதியை பார்த்து அந்த ராஜாவிற்கு முன்னுள்ள காலத்தையும் நினைவு கூறும் போது எல்லாருக்குமே இதனால் துக்கம் ஏற்பட்டது. அதனால் மக்கள் அழுது கொண்டிருந்தனர். தெரு பெருக்குபவர் இந்த கூச்சலுக்கான காரணத்தை கேட்டதும் ஒருவர் மகாராஜா ரஞ்சீத் சிங் இறந்து விட்டார் என்று கூறினார். தெரு பெருக்குபவர் அவ்வாறு கூறியவரின் முகத்தை வியப்புடன் பார்க்க ஆரம்பித்தார். இவரது மரணத்தினால் மக்கள் ஏன் இந்த அளவு நிம்மதி இழந்து காணப்படுகின்றனர் என்று அவர் கேட்டார். மேலும் எனது தந்தைப் போன்றோர் மரணித்து விட்ட பிறகு மகாராஜா ரஞ்சீத் சிங்கை பற்றி நாம் என்ன கூறுவது? என்று அவர் கேட்டார்.

இந்த நகைச்சுவையை கூறிவிட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவருக்கு ஒரு பொருளைப் பற்றிய மதிப்பு இருக்குமோ அதுவே அவரது பார்வையில் பெரியதாக இருக்கும். தெரு பெருக்குபவரின் தந்தை தன் மகனுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார். எனவே அவர் அவனுக்கு மிகவும் பிரியமானவராக ஆகிவிட்டார். மகாராஜா ரஞ்சீத் சிங் அவர்கள் இலட்சக்கணக்கான மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டாலும் தெரு பெருக்குபவர் அவர்களில் ஒருவராக இருக்கவில்லை. மேலும் அவரது பார்வையும் அந்த அளவு விரிவானதாக இல்லை. நாட்டில் இந்த ராஜா மூலம் அமைதி நிலைநாட்டப் –பட்டிருக்கின்றது என்பதை அவர் புரியவில்லை. தனிப்பட்ட ஒரு நபருக்கு கிடைக்கக்கூடிய பலனுக்கு எதிரில் இதற்கு எந்தவொரு மதிப்பும் இல்லை. இதன் காரணமாகவே கண்ணியப்படுத்த வேண்டிய அசல் நபர் என் தந்தை ஆவார். அவரை கண்ணியப்படுத்தியிருக்க வேண்டும் என்று அவர் கருதினார். அவர் இறந்துவிட்ட பிறகு மகாராஜா ரஞ்சீத் சிங் இறந்ததனால் என்ன ஆகப் போகின்றது? என்று அவர் கேட்டார். (அல் ஃபஸ்ல் 6 ஜுன் 1952 தொகுதி 24/6 எண்.135, பக்கம் 5) முக்கியத்துவத்தைப் பொருத்து உலகில் சில சிறிய பொருள்கள் பெரிதாக கருதப்படுகின்றன. சில பெரிய பொருள்களை அதைப்பற்றிய அறிவு இல்லாததன் காரணமாக மனிதன் புறக்கணித்து விடுகின்றான். குழந்தையிடம் மிகவும் விலை உயர்ந்த ரத்தினத்தை கொடுத்தாலும் அவன் அதற்கு என்ன மதிப்பளிப்பான்? என்று கூறினார்கள்.

எனவே நம்பிக்கை கொண்டவர் தான் நடந்து கொள்ளும் விதத்தின் மூலமாகவும் பிறருக்கு பயன்தரக்கூடியவராக இருப்பதன் மூலமாகவும் பிறருக்கு உபகாரம் செய்வதன் மூலமாகவும் பிறரது பார்வையில் நன்மதிப்பை பெற்றவராக விளங்குதவற்கு முயற்சி செய்ய வேண்டும். அவருக்கு கிடைக்கும் கண்ணியம் ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்கக் கூடாது. அவருக்கு அருகில் இருப்பவர்கள் மட்டும் அவருக்காக அழக்கூடாது. மாறாக, எந்த சமுதாயத்தில் அவர் இருக்கின்றாரோ அதில் அவரது கண்ணியம் நிலைத்திருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவரவரது வட்டம் இருக்கின்றது. இந்த வட்டத்திற்குள் ஓர் அஹ்மதி பற்றிய நல்ல அறிமுகம் அவர் வரையில் மட்டும் இருந்து விடக்கூடாது. அது அவருக்கு மட்டும் பயன் தரக்கூடியதாக இருக்கக்கூடாது. மாறாக, ஜமாஅத்தின் நல்ல பெயருக்கு அது காரணமாக இருக்க வேண்டும். இவ்வாறு அதன் மூலம் தப்லீக்கிற்கான வழிகளும் திறக்கின்றன. ஓர் அஹ்மதி இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவராக இருந்தால் உலகிற்கும் இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன என்பது தெரிய வரும். உலகின் அமைதிக்கும் நிம்மதிக்கும் இஸ்லாம் வழங்கும் போதனைகளே உண்மையான போதனைகள் ஆகும். அதன் மூலமாகவே உண்மையான அமைதி நிலைநாட்டப்படும் என்பது தெரிய வரும். உலகிற்கு இதைப் பற்றிய அறிவு இல்லை என்றால் உலகிற்கு இந்த அறிவை வழங்குவதற்கு நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது வட்டத்திற்குள் இருந்தவாறு இதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

சில மக்கள் சாதாரண தியாகங்களை செய்து விட்டு நாங்கள் பெரிய விஷயங்கள் செய்து விட்டோம் என்று கருதுகின்றனர். சிலர் தியாகங்கள் செய்யாமலேயே தங்களது எண்ணத்தில் தியாகங்கள் செய்தவர்களாக ஆகின்றனர். அல்லது மற்றவர்கள் மீது பேருபகாரம் செய்தவர்களாக ஆகிவிடுகின்றனர். அத்தகைய மக்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஒரு மனிதர் ஒருவரை விருந்திற்கு அழைத்தார். தனது சக்திக்கேற்ப அவருக்கு விருந்தோம்பல் செய்தார். அதில் எந்த குறையும் வைக்கவில்லை. அந்த விருந்தாளி செல்ல முற்பட்ட போது அவரிடம் இவர் மன்னிப்பு வேண்டினார். எனது மனைவி நோய்வாய்ப்பட்டிருந்தார். இன்னும் சில நிர்ப்பந்தமான சூழ்நிலைகளும் இருந்தன. எனவே நான் உங்களுக்கு முழுமையாக தொண்டு செய்ய முடியவில்லை. நீங்கள் என்னை மன்னிப்பீர்கள். கண்டும் காணாமல் விட்டு விடுவீர்கள் என நான் நம்பிக்கை வைக்கின்றேன் என்று கூறினார். இதைக் கேட்ட விருந்தாளி நீங்கள் இதனை எந்த நோக்கத்தில் கூறுகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் உங்களை புகழ வேண்டும் என்றே நீங்கள் விரும்புகின்றீர்கள். உங்களது பேருபகாரத்தை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றீர்கள் என்று கூறினார். இது இந்த விருந்தாளியின் எண்ணங்களாகும். ஆனால் விருந்தாளி கூறினார். நீங்கள் என்னிடம் இந்த எதிர்பார்ப்பை வைக்க வேண்டாம். மாறாக, நான் உங்களுக்கு செய்துள்ள பேருபகாரத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். விருந்தோம்பல் செய்தவர், நான் உங்களுக்கு செய்துள்ள பேருபகாரத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது ஒருபோதும் எனது விருப்பமல்ல. உண்மையிலேயே உங்களுக்கு முழுமையாக என்னால் தொண்டு செய்ய முடியவில்லை. அதற்காக உண்மையிலேயே நான் வெட்கப்படுகின்றேன். நீங்கள் எனக்கு ஏதாவது பெரிய நன்மையை செய்திருந்தால் அதைக் கூறுங்கள். அதற்காகவும் நான் நன்றி செலுத்துவேன் என்று கூறினார். அதைக் கேட்ட விருந்தாளி நீங்கள் எதைக் கூறினாலும் சரி; உங்கள் உள்ளத்திலுள்ள விருப்பத்தை நான் நன்றாக புரிந்து கொண்டேன் என்றால் (அதாவது உள்ளத்தின் நிலையை கூட அவர் அறிந்து விட்டார்). விருந்தினர் கூறினார். நீ எனக்கு உணவளித்தாய். இதைவிட அதிகமாக வேறு என்ன நன்மையை நீ எனக்கு செய்து விட்டாய்? ஆனால் நான் உனக்கு பெரும் நன்மையை செய்துள்ளேன். நீ சற்று உனது அறையைப் பார். எந்த அறையில் நீ என்னை உட்கார வைத்துள்ளாயோ அந்த Drawing Room ல் பல ஆயிரங்கள் மதிப்புள்ள பொருட்கள் கிடக்கின்றன. நீ எனக்காக உணவு கொண்டு வருவதற்காக உள்ளே சென்ற போது நான் விரும்பி இருந்தால் விளக்கை பற்ற வைத்து இந்த எல்லா பொருள்களையும் எரித்திருக்க முடியும். அவ்வாறு எரித்திருந்தால் ஒரு பைசா மதிப்புள்ள பொருட்கள் கூட எஞ்சியிருக்குமா? என்பதை நீங்களே கூறுங்கள். நான் நெருப்பு மூட்டியிருந்தால் எதுவுமே எஞ்சியிருக்காது. ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. நான் உன்மீது செய்துள்ள இந்த பேருபகாரம் குறைவானதா என்ன? என்று விருந்தாளி கேட்டார். இதைக் கேட்டு விட்டு வீட்டிற்கு சொந்தக்காரர், உண்மையிலேயே நீங்கள் மிகப்பெரும் நன்மையை செய்துள்ளீர்கள். அதாவது நீங்கள் எனது வீட்டை எரிக்கவில்லை நான் இதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்.

எனவே பாருங்கள்! ஒரு மனிதர் இவ்வாறும் இருக்கின்றார். ஒருவர் செய்த நன்மையை அடையாளங்கண்டு அவருக்கு நன்றி செலுத்துவதற்கு பகரமாக நான் அவர் மீது பேருபகாரம் செய்துள்ளேன் என்று நினைக்கின்றார். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 13, பக்கம் 592) எனவே, ஒரு நம்பிக்கை கொண்டவர் உண்மையான முறையில் தனக்கு நன்மை செய்தவருக்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டும். அந்த நபரைப் போன்று நன்றி மறந்தவராக இருக்கக்கூடாது.

ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முரப்பிகளுக்கும் கூட போதனை செய்துள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்த ஒரு உதாரணத்தை கூறியுள்ளார்கள். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். ஒரு அரசர் இருந்தார். ஒரு பீரின் மிகப்பெரிய சீடராக அவர் இருந்தார். எனது பீரை சந்தியுங்கள் என்று அவர் அமைச்சரிடம் கூறிக் கொண்டே இருந்தார். அமைச்சர் இதன் உண்மை நிலையை அறிந்திருந்ததால் இந்த பீரின் அழைப்பை சாக்குப் போக்குகள் கூறி மறுத்து வந்தனர். இறுதியில் ஒரு நாள் அரசர் பீரிடம் சென்ற போது அமைச்சரையும் தன்னோடு அழைத்துச் சென்றார். அப்போது பீர் அவர்கள் அரசரை நோக்கி, அரசரே ! மார்க்கத்திற்கு தொண்டு செய்வது மிக நல்ல விஷயமாகும். அரசர் அலெக்ஸான்டர் இஸ்லாமிற்கு தொண்டு செய்துள்ளார். மேலும் அவர் இதுவரை புகழ்பெற்று விளங்குகின்றார். (இந்த சம்பவத்தை இதற்கு முன்னரும் நான் கூறியுள்ளேன்). இதைக் கேட்டு விட்டு அமைச்சர், பாருங்கள் ஹுஸூர் ! பீர் சாஹிப் அவர்களுக்கு அவர் வலியாக இருப்பதுடன் வரலாற்று அறிவும் கூட அதிகமாக இருக்கின்ற திறமை இருக்கின்றது. அரசர் அலெக்ஸான்டர் இஸ்லாம் வருவதற்கு முன்னர் வந்தவர் ஆவார். அவர் தொடர்பாக இந்த பீர் கூறிக் கொண்டு இருக்கின்றார். அதாவது இந்த பீர் வலியுல்லாஹ் மட்டுமல்ல; உங்களது இந்த பீர் சாஹிப் அவர்கள் வரலாற்றையும் நன்கு அறிந்தவராக இருக்கின்றார். அவர் புதிய வரலாறை உருவாக்கி உள்ளார் என்று கூறினார். இதன் விளைவாக அந்த அரசருக்கு அந்த பீரின் மீது வெறுப்பு ஏற்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கதையை கூறி இவ்வாறு கூறினார்கள்: சபை பற்றிய அறிவு இருப்பதும் கூட மிகவும் அவசியமாகும். ஒரு மனிதனுக்கு அது தெரியாத வரை மற்றவர்களின் பார்வையில் அவன் அற்பமானவனாக ஆகி விடுகின்றான். எனவே, இதைப் போன்றே சபைக்குரிய மரியாதைகளை கவனத்திற் கொள்வதும் அவசியமானதாகும். உதாரணமாக, ஒரு சபையில் ஆலோசனை நடந்து கொண்டிருக்கின்றது. அப்போது ஒரு பெரிய ஆலிம் அங்கு சென்று எல்லாருக்கும் முன்னால் படுத்து விட்டால் பிறகு எவருமே அவரது அறிவை பொருட்படுத்த மாட்டார்கள். அவரைப் பற்றிய தீய தாக்கம் மக்களிடம் ஏற்படும். எனவே, இது மிகவும் முக்கியமான விஷயமாகும். எந்த வகையான சபையானாலும் சரி; முபல்லிக்கிற்கு, முரப்பிக்கு அதைப் பற்றிய அறிவு இருக்க வேண்டியது அவசியமானதாகும். ஒரு சபைக்கு செல்வதற்கு முன்னர் அந்த சபையை பற்றி அவர் தெரிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு முபல்லிக்கிற்கும் கண்ணிமிக்கவர்கள் இருக்கின்ற சபைகளில் கலந்து கொள்ளும் வகையில் புவியியல், வரலாறு, கணக்கு, மருத்துவம், உரையாடலுக்கான மரியாதைகள், சபை மரியாதைகள் போன்றவை தொடர்பான அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும். இது ஒன்றும் கடினமான பணி அல்ல. சிறிதளவு உழைத்தால் இவற்றை பெற்றுக் கொள்ளலாம். இதற்காக ஒவ்வொரு அறிவு தொடர்பான ஆரம்ப நூல்களைப் படிக்க வேண்டும். (ஹிதாயாத்தே ஸர்ரீன் அன்வாருல் உலூம் தொகுதி 5, பக்கம் 584-585)

இதைத்தவிர இந்த காலத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் நமது முரப்பிகளிடம் கேள்விகள் கேட்கப்படுகின்றன. சில நேரங்களில் பத்திரிகைகளை முறையாக இவர்கள் படிக்காததினால் அதைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இருப்பதில்லை. அல்லது செய்திகளை கேட்காமல் இருப்பதால் அதைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இருப்பதில்லை. அல்லது எந்தவொரு விஷயத்தை பற்றியும், விவகாரத்தைப் பற்றியும் அதன் ஆழம் வரை சென்று பார்ப்பதில்லை. இதனால் சில நேரங்களில் உலகவாதிகளாக இருக்கும் மக்கள் இதிலிருந்து தீய தாக்கத்தை பெற்றுக் கொள்கின்றனர். சில இடங்களிலிருந்து இது போன்ற புகார்களும் வருகின்றன. எனவே, தற்கால நிலையைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். எந்த சபைக்கு நீங்கள் செல்கின்றீர்களோ அந்த சபையைப் பற்றி நன்கு தெரிந்து கொண்ட பிறகே செல்ல வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு உதாரணத்தை கூறியுள்ளார்கள். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள். ஒரு நபருக்கு இரு மகன்கள் இருந்தனர். அந்த நபர் தனது செல்வத்தை அவ்விருவருக்கும் பங்கிட்டு கொடுத்தார். சிறிய மகன் தனது எல்லா செல்வத்தையும் எடுத்துக் கொண்டு மிக தொலைவிலுள்ள ஒரு இடத்திற்கு சென்று விட்டார். அங்கு தனது அனைத்து செல்வத்தையும் தனது தீய நடத்தையின் காரணமாக அவர் வீணாக்கி விட்டார். இறுதியில் ஒரு நபரிடம் ஆட்டு இடையனாக அவர் வேலை செய்து வந்தார். அனைத்தையும் பறிகொடுத்து விட்டதால் இறுதியில் கூலி வேலை செய்ய வேண்டிய நிலை வந்தது. இந்நிலையில் எனது தந்தைக்கு கீழ் பணிபுரியும் எத்தனை தொழிலாளிகளுக்கு எனது தந்தையிடமிருந்து உணவு வளமாக கிடைத்து வருகின்றது. ஆனால் நானோ இங்கு கூலிக்கு வேலை செய்த பிறகும் கூட பசியால் மரணித்துக் கொண்டிருக்கின்றேன். என்னையும் கூட உங்களது தொழிலாளிகளில் ஒருவராக வைத்துக் கொள்ளுங்கள் என்று எனது தந்தையிடம் சென்று நான் ஏன் கூறக்கூடாது? என்று அந்த சிறிய மகன் எண்ணினார். இவ்வாறு எண்ணியதும் அவர் தனது தந்தையிடம் சென்றார். தந்தை அவரைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவரைக் கட்டித் தழுவினார். வேலை செய்பவரிடம் நல்ல தடித்த கன்றுக் குட்டியை கொண்டு வந்து அறுங்கள். அதை நாம் சாப்பிட வேண்டும். மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும் என்று கூறினார். அப்போது அவரது இரண்டாவது மகன் அங்கு வந்தார். தந்தை அவருக்கும் செல்வத்தை வழங்கி இருந்தார். அவர் மிகப்பெரிய வியாபாரத்தை நலல் முறையில் நடத்தி வந்தார். அவருக்கு இந்த விஷயம் மிகத் தீயதாக தோன்றியது. ஒருவன் அனைத்தையும் பறிகொடுத்து விட்டு வந்திருக்கின்றான். அவனை இந்த அளவு இவர்கள் கவனிக்கின்றனர் என்று அவன் எண்ணினான். தனது தந்தையிடம் அந்த மகன் நான் இவ்வளவு வருடமாக உங்களுடன் இருக்கின்றேன். உங்களுக்கு தொண்டு செய்து வருகின்றேன். ஒருபோதும் நீங்கள் இட்ட கட்டளையை மறுத்ததில்லை. ஆனால், நீங்கள் எனக்கு உனது நண்பர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியை கொண்டாடு என்று கூறி ஒரு ஆட்டுக் குட்டியை கூட எனக்கு தந்ததில்லை. ஆனால் உங்களது செல்வத்தை கேலிக்கையான விஷயங்களில் வீணாக்கிவிட்ட உங்களது இந்த மகன் வந்த போது அவனுக்காக நீங்கள் வளர்த்த கன்றுக் குட்டியை அறுக்கின்றீர்கள் என்று கூறினார்.

அதற்கு தந்தை, நீ எப்போதும் எனக்கு அருகில் இருக்கின்றாய். மேலும் எதுவெல்லாம் என்னுடையதோ அது உன்னுடையதும் ஆகும். ஆனால் உனது இந்த சகோதரன் வந்த போது நான் ஏன் மகிழ்ச்சியைக் கொண்டாடினேன் என்றால் இவன் மரணித்திருந்தான். இப்போது உயிர் பெற்று விட்டான். இவன் தொலைந்து போய் இருந்தான். இப்போது கிடைத்து விட்டான் என்று கூறினார். எனவே ஒரு நபர் ஏதாவது தவறு செய்து விட்டு அந்த தவறை செய்த பிறகு அல்லாஹ்வின் சமூகத்தில் சென்று அவனுக்கு முன்னால் குனிந்து தனது குற்றங்களை ஏற்றுக் கொண்டு தனது வெட்கத்தை வெளிப்படுத்துகின்றார் என்றால் பிறகு நிச்சயமாக அல்லாஹ் அப்படிப்பட்ட தவ்பாவை ஏற்றுக் கொள்கின்றான். முன்பை விட அதிகமாக அவர் மீது கருணை காட்டுகின்றான். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 12, பக்கம் 375) எனவே நம்பிக்கை கொண்டவரும் அல்லாஹ்வின் பண்புகளை கடைபிடித்தவாறு எங்கு தன்னிடம் அல்லாஹ் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றாரோ அங்கு அவரும் அல்லாஹ்வின் இந்த நற்பண்புகளை கடைபிடித்தவாறு குற்றம் புரிந்துள்ள தனது சகோதரரைப் பார்க்கும் போது அந்த சகோதரர் உண்மையான உள்ளத்துடன் அவரிடம் மன்னிப்பு கேட்க வந்துள்ளார் என்றால் மேலும் தனது குற்றங்களை ஏற்றுக் கொள்கின்றார் என்றால் அவரை கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். அத்துடன் அவருக்காக துஆவும் செய்ய வேண்டும். எவர் மன்னிப்பு கேட்கவில்லையோ அல்லாஹ் அவரையும் மன்னிக்க வேண்டும். நமது தவறுகளை மன்னிக்க வேண்டும். நம்மையும் கண்டும் காணாமல் விட வேண்டும்.

மனிதனின் நல்லொழுக்கம் எல்லா நிலையிலும் வலுவாக இருக்க வேண்டும். சில நேரம் இங்கும் சில நேரம் அங்குமாக அவன் இருக்கக்கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

ஒரு ராஜா ஒரு முறை கத்தரிக்காய் சாப்பிட்டார். அது அவருக்கு மிகவும் சுவையாக இருந்தது. பல மக்களும் இந்த கதையை கேட்டுள்ளனர். அந்த ராஜா அரசவைக்கு வந்த போது கத்தரிக்காய் எவ்வளவு நல்ல பொருளாக இருக்கிறது என்று கூறினார். ராஜாவிற்கு ஒரு தோழர் இருந்தார். அவரும் கத்தரிக்காய் பற்றி புகழ்ந்து கூற ஆரம்பித்தார். அவர் கூறினார். மற்றதையெல்லாம் விடுங்கள். அதன் வடிவத்தை பாருங்கள். எவ்வளவு சிறந்த வடிவத்தில் அது இருக்கின்றது. ஒரு பீர் பச்சை நிறத்தில் தலைப்பாகை கட்டியிருப்பது போன்று அதன் தலை இருக்கின்றது. நீல நிற ஆடையை அணிந்திருக்கின்றது. வானத்தின் நிறம் கூட அதனிடம் தோற்றுப் போய் விடுகின்றது. செடியில் அது எவ்வாறு தொங்குகிறது என்றால் ஓர் இளவரசர் ஊஞ்சலில் அமர்ந்து ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதைப் போன்று அது இருக்கின்றது. இவ்வாறெல்லாம் கத்தரிக்காயை அவர் புகழ்ந்து கூறினார். மருத்துவ ரீதியாக அதற்கு என்னவெல்லாம் சிறப்புகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் எண்ணி எண்ணி அவர் கூறினார். இந்த விஷயங்களைக் கேட்டு ராஜாவிற்கும் பேரார்வம் ஏற்பட்டது. ராஜா சிறிது நாட்கள் வரை கத்தரிக்காயையே சாப்பிட ஆரம்பித்து விட்டார். கத்தரிக்காய் சூட்டை கிளப்பக் கூடியதாகும். இதனால் அவர் நோயுற்றார். அதற்குப் பிறகு ராஜா ஒரு நாள் கத்தரிக்காய் மிகவும் தீய பொருளாகும் என்று கூறினார். அதைக் கேட்ட அவரது அதே தோழர் கத்தரிக்காயின் தீமைகளை கூற ஆரம்பித்தார். பாருங்கள். அதன் முகம் எவ்வளவு கருப்பாக இருக்கின்றது. அதன் கால்கள் நீள நிறத்தில் இருக்கின்றன. ஒருவரைத் தூக்கில் தொங்கவிட்டிருப்பதைப் போன்று அது தலை கீழாக தொங்குகிறது. இதை விட அதிகமாக இதன் தீமையை எவ்வாறு கூற முடியும் என்று கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். ஒவ்வொரு பொருளின் சிறப்பம்சங்களும் இருக்கின்றன. குறைகளும்

இருக்கின்றன. தீமைகளும் இருக்கின்றன. அந்த சந்தர்ப்பதில் ராஜாவின் அந்த தோழர் மருத்துவ ரீதியாக கத்தரிக்காயிடம் இருக்கும் எல்லா தீமைகளையும் எடுத்துக் கூறினார். அவருக்கு அருகில் அமர்ந்திருப்பவர்களில் ஒருவர் நேற்று நீங்கள் இதே நேரத்தில் கத்தரிக்காயை புகழ்ந்து கூறினீர்கள். இன்று அதன் தீமைகளை கூறுகின்றீர்கள். குறைந்த பட்சம் உண்மையை கூறலாமே என்று கூறினார். அதற்கு ராஜாவின் தோழர், நான் ராஜாவின் வேலை ஆள் ஆவேன். கத்தரிக்காயின் வேலை ஆள் அல்ல என்று கூறினார்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 10, பக்கம் 77-78)

இன்றைய முஸ்லிம்களின் உலகில் பொதுவாக இதையே நாம் பார்க்கின்றோம். அவர்களைப் பார்த்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நல்லொழுக்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்களின் நல்லொழுக்கமே எல்லாரையும் விட அதிகமாக வலுவானதாக இருக்க வேண்டும். ஆனால் துர்பாக்கிய நிலை என்னவென்றால் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் மிகவும் வீழ்ச்சியடைந்து விட்டனர். இந்த மக்கள் உண்மையில் நிலைத்திருப்பார்களா? என்ற கேள்வியே எழாது. இவர்கள் பிறரை மகிழ்விப்பதற்காகவே இருக்கின்றனர். எங்கு தங்களது சுய பலன்களை பார்க்கின்றனரோ அந்த நபரின் பக்கமே அவர்கள் திரும்பி விடுகின்றனர். தலைவர்களாக இருந்தாலும் சரி; அல்லது பொது மக்களாக இருந்தாலும் சரி. அனைவரது நிலையும் இப்படித்தான் இருக்கின்றது. உண்மையில் நிலைத்திருப்பது எதிர்பார்ப்பது என்னவென்றால், சரியானவற்றையும் தவறையும் கண்முன் நிறுத்தியவாறு பிறகு தனது கருத்தை நிலைநாட்ட வேண்டும். மேலும் சரியான ஆலோசனையை வழங்க வேண்டும்.

பிறகு அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவது தொடர்பாக இன்னொரு சம்பவத்தை நான் கூறுகின்றேன். உண்மையில் அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பின் மூலமாகவே பிரச்சனைகளுக்கான தீர்வு ஏற்படுகின்றது. இந்த தொடர்பு தக்வாவின் மூலமாக வளர்ச்சி அடைகின்றது. அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்கின்றோம். நாம் சரியான இஸ்லாமிய போதனைக்கேற்ப வாழ்க்கையை கழிக்க வேண்டும். நமக்கு இத்தகைய வாழ்க்கையை கழிப்பதற்காக எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் பக்கமே பார்க்க வேண்டியதிருக்கின்றது. அவனுடன் தொடர்பை நிலைநாட்ட வேண்டியதிருக்கின்றது. ஒரு போதும் உலக விஷயங்கள் மூலமாக நமக்கு வெற்றி கிடைக்காது. நம்மிடம் தக்வாவும், அல்லாஹ்வைப் பற்றிய அச்சமும் இருந்தால் தக்வா மற்றும் இறையச்சத்தை நாம் நம்மிடம் உருவாக்கினால் அதற்குப் பிறகே நமக்கு வெற்றிகள் கிடைக்கும். இந்த நிலை ஏற்படும் போது மலக்குகள் நமது பாதையை சரி செய்து கொண்டே செல்வர். இன்ஷா அல்லாஹ்.

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இதைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது நம்மிடம் தக்வாவை உருவாக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இறைவனுடன் தொடர்பை உருவாக்க வேண்டும். பல நிலைமைகளில் நாம் பார்க்கின்றோம். ஒரு உலகவாதிக்கு இன்னொரு உலகவாதியுடன் உள்ள தொடர்பு அவருக்கு பயனைத் தரக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு இருக்கும் போது இறைவனுடன் அவருக்கு இருக்கும் தொடர்பு அதைவிட ஆயிரங்கள், லட்சங்கள் மடங்கு அதிகமாக பயனளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கதையை கூறி வந்தார்கள். ஒரு நபர் ஒரு பயணத்தில் செல்ல ஆரம்பித்தார். அவர் தன்னிடமிருந்த சில ரூபாய்களை காஸியிடம் அமானிதமாக தந்து விட்டு சென்றார். சிறிது காலம் கழித்து திரும்பி வந்து தனது ரூபாயை கேட்ட போது காஸியின் எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. காஸி, மியான் அறிவை பயன்படுத்து. எந்த ரூபாயை எப்போது நீ என்னிடம் அமானிதமாக தந்தாய் என்று கேட்டார். அந்த நபர் எழுத்துப்பூர்வமாக அவரிடமிருந்து எதையும் பெற்றிருக்கவில்லை. காஸி காஸியாக இருப்பதே போதுமானது என்றே அவர் கருதி இருந்தார். ஆனால் காஸியோ நீ என்னிடம் ரூபாய் தந்திருந்தால் அதற்கான ஆதாரத்தை கொண்டு வா. ஏதாவது ரஸீது இருந்தால் காட்டு. ஏதாவதொரு சாட்சியை கொண்டு வா என்று கூறி விட்டார். அந்த நபர் காஸிக்கு பல வகையில் அது பற்றி நினைவூட்டினார். ஆனால் அவரோ நீ எதையும் தரவில்லை. உனது மூளை செயல் இழந்து விட்டது. நீ ஒருபோதும் என்னிடம் எந்த பைசாவும் தரவில்லை என்று கூறி விட்டார். இறுதியில் அவர் அரசரிடம் சென்று புகார் கூறினார். அரசர், நீதிமன்றத்தில் வைத்து நான் உனக்கு சாதகமாக எதையும் செய்ய முடியாது. உனக்கு எதிராக தீர்ப்பு கூறும் நிர்பந்தத்திற்கு நான் ஆளாகி விடுவேன். ஏனென்றால் இது தொடர்பான எந்த எழுத்தும் உன்னிடம் இல்லை. சாட்சியமும் இல்லை. ஆதாரமும் இல்லை. ஆனால் ஒரு வழிமுறையை நான் உனக்கு கூறுகின்றேன். நீர் உண்மையாளராக இருந்தால் இதிலிருந்தும் நீர் பயனடையலாம். அதாவது இந்த நாளில் எனது ஊர்வலம் புறப்பட்டு வரும். காஸியும் தனது வீட்டிற்கு வராந்தாவிற்கு முன்னால் இருப்பார். அந்த நாளில் தெருக்களிலும், நகரத்திலும் ராஜா சுற்றி வருவது இருக்கும். நீ அந்த காஸிக்கு அருகில் நிற்க வேண்டும். நான் உன்னிடம் வந்து உன்னுடன் எவ்வித செயற்கைத் தன்மையுமின்றி சாதாரணமாக பேச ஆரம்பித்து விடுவேன். நீ என்னை ஏன் சந்திக்க வரவில்லை. இவ்வளவு காலமாக நமது சந்திப்பு நிகழவில்லை. அது ஏன்? என்று நான் கேட்பேன். எனக்கு சில கவலைகள் இருந்தன. அதன் காரணமாக என்னால் வர முடியவில்லை என்று அதற்கு நீ என்னிடம் பதில் கூற வேண்டும் என்று அரசர் கூறி இருந்தார்.

அந்த நபரும் அவ்வாறே செய்தார். ஊர்வலம் வந்த நாளன்று காஸிக்கு அருகில் சென்று நின்று கொண்டார். அரசர் வந்ததும் அரசர் காஸிக்கு பதில் அந்த நபரை பார்த்து பேச ஆரம்பித்தார். நீங்கள் சென்று விட்டீர்கள். நீண்ட நாட்களாக நமது சந்திப்பு ஏற்படவில்லை என்று அரசர் கூறினார். அதற்கு அந்த நபர், தனது பயணத்தின் நிலையை எடுத்துக் கூறினார். மீண்டும் அரசர், பயணத்திலிருந்து திரும்பிய சமயத்தில் ஏன் என்னை சந்திக்கவில்லை ? என்று கேட்டார். அதற்கு அந்த நபர், சில கவலைகள் இருந்தன. சிலரிடமிருந்து தொகை வசூலாக வேண்டியதிருந்தது என்று பதில் கூறினார். அதற்கு அரசர், இல்லை; இல்லை. நீங்கள் கண்டிப்பாக என்னை சந்தித்திருக்க வேண்டும். என்னை சந்திப்பதற்காக விரைவாக வந்து விடுங்கள் என்று அவரிடம் கூறினார். அரசரின் ஊர்வலம் அந்த இடத்தை கடந்து சென்றதும் காஸி அந்த நபரிடம் தோழரே விஷயத்தை சற்று கேளுங்கள். நீங்கள் அந்த நாளில் என்னிடம் வந்திருந்தீர்கள். அமானிதமாக ஏதோ ஒன்றை என்னிடம் தந்து விட்டு சென்று விட்டதாக கூறினீர்கள். நான் இப்போது முதியவனாகி விட்டேன். எனது நினைவாற்றல் வேலை செய்வதில்லை. கொஞ்சம் ஏதாவது அடையாளத்தை கூறினால் எனக்கு நினைவில் வந்து விடும் என்று கூறினார். அந்த நபர் இதற்கு முன்னர் காஸியிடம் கூறிய அதே விஷயங்களை மீண்டும் கூறினார். இதைக் கேட்ட காஸி, நல்லது; நல்லது. இந்த வகையிலுள்ள ஒரு பை இருந்தது. அது உங்களுடையது தானோ? அது என்னிடம் தான் இருக்கின்றது. வந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். காஸி ரூபாயையும் கொண்டு வந்து கொடுத்து விட்டார்.

இந்த கதையை கூறி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். உலகத்தின் எதிர்ப்பை கண்டு எதற்கு பயப்பட வேண்டும். ஒருவர் எவ்வளவு பெரிய தளபதியாக இருந்தாலும் வாள்கள் மற்றும் குண்டுகள் போன்றவற்றின் மூலமாகவே அவரால் இழப்பை ஏற்படுத்த முடியும். ஆனால் இந்த எல்லா பொருள்களுமே நம்முடைய இறைவனுடையதாகும். அவன் அந்தப் பக்கம் தாக்காதே என்று கூறினால் யாரால் தாக்க முடியும் ? எனவே அடியார்கள் அல்லாஹ்வுடன் நட்பு கொள்ள வேண்டும். அவனை நேசிக்க வேண்டும். அஞ்சுவதாலோ, மரணிப்பதாலோ, பிறரை கொல்வதாலோ எந்தப் பணியும் நடைபெறாது. மனிதன் தன்னைத் தானே இறைவனின் கைகளில் தந்து விடுவது தான் முன்னேற்றத்திற்குரிய வழியாகும். எந்த பக்கம் அவன் கொண்டு செல்ல விரும்புகின்றானோ அந்த பக்கம் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 15, பக்கம் 274-275)

ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரின் உதாரணம் என்ன ? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான நம்பிக்கை கொண்டவரின் உதாரணத்தை உண்மையான நண்பருடன் இணைத்துக் கூறுகின்றார்கள். அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்.

ஒரு பணக்கார மனிதர் இருந்தார். அவரது மகனுக்கு சில தீய இளைஞர்களுடன் நட்பு இருந்தது. வெறுமனே சுற்றித் திரிகின்ற நபர்களுடன் அவருக்கு நட்பு இருந்தது. இவர்கள் உன்னுடைய உண்மையான நண்பர்கள் அல்ல. பேராசையின் காரணமாக மட்டுமே உம்மிடம் அவர்கள் வருகின்றனர். அவர்கள் ஒருவர் கூட உங்களுடன் நன்றி பாராட்டுபவர்களாக இல்லை என்று கூறி தந்தை மகனுக்கு புரிய வைத்தார். ஆனால் மகன் தந்தையிடம் உங்களுக்கு ஒருவேளை எந்தவோர் உண்மையான நண்பரும் கிடைக்காமல் இருந்திருக்கலாம். எனவே தான் நீங்கள் எல்லா மக்கள் தொடர்பாகவும் இவ்வாறு எண்ணுகின்றீர்கள். எனது நண்பர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மிகவும் நன்றி பாராட்டுபவர்களாக இருக்கின்றனர். எனக்காக உயிரை தியாகம் செய்ய தயாராக இருக்கின்றனர் என்று கூறினான். தந்தை மீண்டும் உண்மையான நண்பர்கள் கிடைப்பது மிகவும் கடினமான விஷயமாகும். எனது முழு வாள்நாளிலும் எனக்கு ஒரேயோர் உண்மையான நண்பர் தான் கிடைத்தார் என்று கூறி மீண்டும் மகனுக்கு புரிய வைத்தார். ஆனால் மகனோ தனது பிடிவாதத்தில் நிலைத்திருந்தான்.

கொஞ்சம் காலம் கழிந்ததும் அவன் வீட்டில் உள்ளவர்களிடம் தனது செலவிற்காக கொஞ்சம் தொகையை கேட்டான். அதற்கு தந்தை நான் உனது செலவை ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீ உனது நண்பர்களிடம் சென்று கேள். இப்போது என்னிடம் எதுவும் இல்லை என்று பதில் கூறினார். உண்மையில் அவனது தந்தை அவனுக்காக சந்தர்ப்பத்தை உருவாக்க விரும்பி இருந்தார். அதாவது அவன் தனது நண்பர்களை சோதித்து பார்க்க வேண்டும் என்று விரும்பினார். தந்தை வீட்டிலிருந்து இவ்வாறு பதில் கூறி விட்டார். வீட்டிலிருந்து அவனுக்கு பதில் கிடைத்து விட்டது என்பது எல்லா நண்பர்களுக்கும் தெரிந்து விட்டது. அதனால் அவர்கள் அவனிடம் வந்து போவதை நிறுத்தி விட்டனர். அவனை சந்திப்பதை விட்டு விட்டனர். இறுதியில் சோர்வடைந்து அந்த மகன் தாமே அவர்களை சந்திப்பதற்காக சென்றான். இந்த மகன் தனது நண்பர்களின் வீடுகளுக்கு சென்றான். எந்த நண்பனின் கதவுகளை தட்டினானோ அந்த நண்பன் உள்ளே இருந்து கொண்டே தான் வீட்டில் இல்லை என்றும் எங்கோ வெளியில் சென்றிருப்பதாகவும் ஒருவரிடம் கூறி அனுப்பினான். அல்லது தான்

நோயுற்று இருப்பதாகவும் இப்போது சந்திக்க முடியாது என்றும் கூறி விட்டான். முழு நாளும் அவன் சுற்றி சுற்றி வந்தான். எந்த நண்பனும் அவனை சந்திப்பதற்காக வெளியே வரவே இல்லை. இறுதியில் மாலை நேரத்தில் வீட்டிற்கு திரும்பி வந்தான். நண்பர்கள் உனக்கு என்ன உதவி செய்தனர் என்பதை கூறு என்று தந்தையார் கேட்டார். எல்லாருமே ஹராமானவற்றை உண்பவர்கள். ஒருவன் ஒரு காரணத்தை கூறுகின்றான். இன்னொருவன் இன்னொரு சாக்குப் போக்கை தேடுகின்றான் என்று அவன் கூறினான். இந்த மக்கள் நன்றி பாராட்டுபவர்கள் அல்ல என்று நான் உன்னிடம் கூறவில்லையா? நல்லது. உனக்கும் அனுபவம் கிடைத்திருக்கும் என்று தந்தை கூறினார்.

இப்போது வா. நான் உன்னை எனது நண்பனை சந்திக்க வைக்கின்றேன். தந்தையின் நண்பனான அந்த படை வீரர் அருகிலுள்ள ஓர் இடத்திற்கு சென்றிருந்தார். இராணுவ முகாமில் வேலை செய்து வந்தார். தந்தை மகனாகிய இவர்கள் இருவரும் அவரது வீட்டை அடைந்தனர். கதவைத் தட்டினர். நான் வருகின்றேன் என்று உள்ளே இருந்து குரல் வந்தது. வெகு நேரம் கழிந்த பிறகும் கதவைத் திறப்பதற்காக யாருமே வரவில்லை. மகனது உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் உருவாக ஆரம்பித்தன. அவன் தந்தையிடம், தந்தையே! உங்களது நண்பரும் கூட எனது நண்பர்களைப் போன்றவரே ஆவார் என்று கூறினார். அதற்கு தந்தை, சிறிது நேரம் காத்திரு என்று கூறினார். இறுதியில் கொஞ்சம் நேரம் கழிந்ததும் அந்த நண்பர் கதவைத் திறந்து வெளியே வந்தார். அப்போது அவரது கழுத்தில் ஒரு வாள் தொங்க விடப்பட்டிருந்தது. ஒரு கையில் ஒரு பையை அவர் தூக்கிக் கொண்டிருந்தார். மற்ற கையால் தனது மனைவியின் கையை பற்றிப் பிடித்திருந்தார். கதவைத் திறந்ததுமே அவர் என்னை மன்னிக்க வேண்டும். உங்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. என்னால் விரைவாக வர முடியவில்லை. நான் விரைவாக வர முடியாததற்கான காரணம் இதுவாகும். அதாவது நீங்கள் எனது கதவை தட்டிய போது இன்று ஏதோ முக்கிய விஷயம் நடந்திருக்கின்றது என நான் புரிந்து கொண்டேன். இதனால் தான் சுயமே தாங்களே வந்துள்ளீர்கள். அது அல்லாமல் தாங்கள் ஒரு பணியாளை அனுப்பி இருக்க முடியும். நான் கதவை திறக்க முற்பட்ட போது ஒரே நொடியில் எனக்கு இந்த எண்ணம் வந்தது. அதாவது ஒரு வேளை ஏதாவதொரு துன்பம் உங்களுக்கு வந்திருக்கலாம். இந்த மூன்று பொருட்கள் என்னிடம் இருந்தன. ஒன்று வாளாகும். இன்னொன்று பை ஆகும். அதில் நான் ஒரு வருட காலமாக சேர்த்து வைத்திருந்த சில நூறு ரூபாய்களை வைத்திருந்தேன். எனது மனைவியும் தொண்டு செய்வதற்காக வந்தாள். அதாவது ஒருவேளை உங்களது வீட்டிலுள்ள எவருக்காவது கஷ்டம் ஏற்பட்டு இருக்கலாம். எனவே அவர்களுக்கு தொண்டு செய்ய என் மனைவி வந்தாள். எனக்கு காலதாமதம் ஏற்பட்டதற்கு காரணம் நான் பையை நிலத்தில் மறைத்து வைத்திருந்தேன். அதை வெளியில் எடுப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. எனவே நான் தனது உயிரை அர்ப்பணித்து பணி செய்கின்ற ஒருவரால் தான் இந்த துன்ப வேலையில் உதவ முடியும் என்று எண்ணினேன். அதற்காக நான் வாளை என்னுடன் எடுத்துக் கொண்டேன். உயிர் தேவைப்பட்டால் என்னால் உயிரை கொடுக்க முடிய வேண்டும் என்று நான் எண்ணினேன். பிறகு நான் நீங்கள் பணக்கார மனிதர் ஆவீர்கள். ஆனால் உங்களது செல்வம் வீணாகி விடும் அளவிற்கு ஏதாவதொரு துன்பம் உங்களுக்கு வந்திருக்கலாம் என்று எண்ணினேன். அவ்வாறு இருந்தால் என்னிடம் உள்ள ரூபாய் மூலம் நான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என நான் எண்ணினேன். அதனால் நான் இந்த பையை என்னுடன் எடுத்து கொண்டேன். பிறகு நான் இவ்வாறு எண்ணினேன். நோய் போன்றவை எப்போதும் மனிதனுடன் ஒன்றி இருக்கின்றன. எனவே உங்கள் வீட்டிலுள்ள எவருக்காவது ஏதாவது ஒரு துன்பம் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் நினைத்தேன். எனவே அவருக்கு தொண்டு செய்வதற்காக எனது மனைவியையும் என்னுடன் அழைத்து வந்தேன் என்று அந்த நண்பர் கூறினார். அதைக் கேட்ட அந்த பணக்கார மனிதர், எனது நண்பரே ! எனக்கு இந்த சமயத்தில் எந்தவொரு உதவிக்கான தேவையும் இல்லை. இந்த சமயத்தில் எந்தவொரு துன்பமும் எனக்கு வரவில்லை. மாறாக, நான் எனது மகனுக்கு பாடம் கற்றுக் கொடுப்பதற்காகவே வந்துள்ளேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். இதுவே உண்மையான நட்பாகும். இதை விட அதிகமாக உண்மையான நட்பை மனிதன் அல்லாஹ்வுடன் நிலைநாட்ட வேண்டும். அதாவது தனது உயிர், பொருள் மற்றும் தனது ஒவ்வொரு பொருளையும் தியாகம் செய்தவற்காக தயாராக இருக்க வேண்டும். நண்பர்களில் ஒருவர் மற்றவர் கூறுவதை சில நேரம் ஏற்றுக் கொள்கின்றார். சில நேரங்களில் தான் கூறுவதை தனது நண்பரை ஏற்றுக் கொள்ள வைக்கின்றார். இவ்வாறே மனிதனின் கடமை இதுவாகும். அவன் உண்மையான உள்ளத்துடனும் திறந்த நெஞ்சத்துடனும் அல்லாஹ்வின் வழியில் தியாகங்கள் செய்து கொண்டே செல்ல வேண்டும். நமது எத்தனை விஷயங்களை அல்லாஹ் ஏற்றுக் கொண்டிருக்கின்றான். இரவு, பகலாக அவன் நமக்கு வழங்கியுள்ள அருள்களிலிருந்து நாம் பயனடைகின்றோம். அவன் நமது சுகத்திற்காகவும், ஒப்விற்காகவும் எந்த எந்த பொருள்களை நமக்காக தயார் செய்துள்ளானோ நாம் அவற்றை பயன்படுத்துகின்றோம். இறுதியில் எந்த உரிமையின் கீழ் நாம் இந்த பொருள்களிலிருந்து பயன் அடைகின்றோம். நமது எத்தனை விருப்பங்களை இறைவன் நிறைவேற்றி இருக்கின்றான். ஒன்றிரண்டு முறை நமது விருப்பத்திற்கு மாற்றமாக ஏதாவது நடந்து விட்டால் மக்கள் எவ்வாறு அல்லாஹ்வின் மீது தவறான எண்ணம் கொண்டு விடுகின்றனர். உண்மையான தொடர்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் செழிப்பான நிலையிலும், வறுமையிலும் இந்த இரு நிலைமைகளிலும் இறைவனோடு உள்ள தொடர்பு நிலைபெற்றிருக்க வேண்டும். அதில் எந்த வித்தியாசமும் வந்து விடக்கூடாது.

(அப் அமல் அவ் ஸிர்.ஃப் அமல் கர்னே கா வக்த்ஹே அன்வாருல் உலூம்
தொகுதி 18, பக்கம் 382-384)

எனவே எந்த மக்கள் தொழுகைக்குரிய உரிமையை செலுத்துவதில்லையோ அவர்கள் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த மக்கள் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவேன் என்று செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வில்லையோ அவர்கள் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். எந்த மக்கள் இங்கு வந்தனரோ அவர்கள் அஹ்மதிய்யத்தின் காரணமாகவே இங்கு வந்தனர். ஆனால் இங்கு வந்த பிறகு அஹ்மதிய்யத்தின் காரணமாகத் தான் இங்கு இருப்பதற்கான குடியுரிமை அவர்களுக்கு கிடைத்தது என்பதை அவர்கள் மறந்து விட்டனர். இதன் காரணமாக அவர்கள் அதிகம் அதிகமாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய முன் வர வேண்டும். ஆனால் அவர்கள் அதை மறந்து விட்டனர். சில நேரங்களில் ஆட்சேபனை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். அத்தகைய மக்கள் நல்ல இறை அடியார்களும் அல்ல. நன்றியுணர்வு உள்ளவர்களும் அல்ல. நன்றியுணர்வு என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று கஷ்டத்திலும், எளிதான நிலையிலும், செழிப்பிலும், வறுமையிலும் இப்படிப்பட்ட இரண்டு நிலைமைகளிலும் அது இருக்க வேண்டும். நன்றியுணர்வின் உயர்ந்த தரம் நிலைநாட்டப்பட வேண்டும். அல்லாஹ்விற்காக எல்லா சமயத்திலும் அவனுக்காக தியாகம் செய்வதற்கு தம்மைத்தாமே தயாராக வைத்திருக்க வேண்டும். நபிமார்கள் மற்றும் அல்லாஹ்வின் அடியார்கள் மீது இந்த நட்பிற்குரிய உரிமையை செலுத்திய நபர்களின் சம்பவத்தை நான் உங்களுக்கு கூறினேன். அது எவ்வாறு உங்களுக்கு பொருந்துகிறது என்று பாருங்கள்.

இதைக்கூட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் அழகிய வடிவத்தில் உள்ளத்தை ஈர்க்கக்கூடிய சொற்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது எங்கு அன்பு இருக்கின்றதோ அங்கு ஆதாரங்கள் கேட்கப்படுவதில்லை. அங்கு மனிதன் முதலில் கட்டுப்படுவதாக அறிவிப்பு செய்கின்றான். பிறகு இந்த கட்டளைக்கேற்ப நான் எவ்வாறு செயல்படுவேன் என்று எண்ணுகின்றான். இதுபோன்ற நிலை தான் நபிமார்களின் நிலையாக இருக்கின்றது. அல்லாஹ்வின் முதல் வசனம் இறங்குகின்ற போது அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு அந்த நபிமார்களின் உள்ளத்தில் எந்த அளவு இருக்கின்றதென்றால் அவர்கள் ஆதாரங்களை கேட்பதில்லை. பிறகு இறைவனின் குரல் அவர்களது காதுகள் வரை எட்டுகின்ற போது, எங்கள் இறைவா! என்ன? நீ எங்களை பரிகாசம் செய்கின்றாயா? நாங்கள் எங்கே? இந்த பணிகளை நாங்கள் எவ்வாறு செய்ய முடியும்? என்று அவர்கள் கூற மாட்டார்கள். மாறாக, எங்கள் இறைவா! மிகவும் நன்று என்று கூறிவிட்டு அந்த பணியை செய்வதற்காக அவர்கள் எழுந்து நிற்கின்றனர். அதற்குப் பிறகு தான் இப்போது அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்கின்றனர். இதைத்தான் பெருமானார் (ஸல்) அவர்களும் செய்தார்கள். இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அந்த இரவில் செய்தார்கள். இறைவன் அவர்களிடம், எழுவீராக! உலகின் நேர்வழிக்காக நிற்பீராக! என்று கூறினான். அவர்கள் உடனடியாக எழுந்து நின்றார்கள். அதற்குப் பிறகு தான் இப்போது நான் இந்த பணியை எவ்வாறு செய்வேன்? என சிந்திக்க ஆரம்பித்தார்கள். இன்றிருந்து 50 வருடங்களுக்கு முன் (அவர்கள் இதை கூறும் போது 50 வருடங்களுக்கு முன் என்று கூறுகின்றார்கள். இன்று இந்த விஷயம் நடந்து 125 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் சொல்வதென்றால் 126 அல்லது 127 ஆண்டுகள் ஆகிவிட்டன) ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்றிலிருந்து 50 வருடங்களுக்கு முன்னால் அந்த வரலாற்று சிறப்புமிக்க இரவு வந்தது. அது உலகில் வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களுக்கு வலுவான ஆயுதமாக நிரூபணமாக இருக்கின்றது. வருங்காலத்தில் உருவாக இருக்கின்ற புதிய உலகிற்கான ஆரம்ப இரவாகவும் ஆரம்ப நாளாகவும் அது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. நாம் அந்த இரவின் காட்சியை சிந்திப்பதாக இருந்தால் நிச்சயமாக நமது உள்ளம் அந்த மகிழ்ச்சியை முற்றிலும் வேறொரு பார்வையுடன் பார்த்திருக்கும். இந்த மகிழ்ச்சி அவர்களுக்கு அவர்கள் கழித்த எந்த நொடிப் பொழுதின் விளைவாக கிடைத்தது என்பதைப் பற்றி நம்மில் எத்தனை பேர் சிந்தித்திருப்போம். அதாவது எந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தனரோ அவர்களுக்கு இந்த மகிழ்ச்சி அவர்கள் கழித்த எந்த நொடிப்பொழுதின் விளைவாக கிடைத்தது. மேலும் எந்த இரவிற்குப் பிறகு அவர்கள் மீது வெற்றியின் இந்த நாள் உதயமானது என்பதை சிந்திக்க வேண்டும். பல மக்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக காத்திருந்து காத்திருந்து மரணித்து விட்டனர். ஆனால் எவர்கள் அவரை ஏற்றுக் கொண்டனரோ அவர்கள் இந்த மகிழ்ச்சியும் இந்த வெற்றியின் நாளும் அவர்களுக்கு அந்த நொடிப்பொழுது மற்றும் அந்த இரவின் விளைவாகத் தான் கிடைத்தது என்று எண்ணுவதில்லை. அந்த இரவில் தன்னந்தனியாக ஓர் அடியார் உலகின் பார்வையில் அற்பமானவராகவும் எல்லா உலகப் பொருட்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டவராகவும் இருந்தார். அவரிடம் இறைவன், எழுவீராக! உலகின் நேர்வழிக்காக நிற்பீராக! என்று கூறினான்.

அதற்கு அவர், என் இறைவா! நான் நின்று விட்டேன் என்றார். இதுவே அந்த நன்றியுணர்வாகும். இதுவே அந்த அன்பின் சரியான காட்சியாகும். அதனை இறைவன் ஏற்றுக் கொண்டான். தனது அருளாளும் கருணையாளும் அவருக்கு வழங்கினான். அழுவதும், சிரிப்பதும் ஆகிய இரண்டுமே அல்லாஹ்வின் மகிமையையும் விட்டும் மிகவும் தொலைவிலுள்ள விஷயங்களாகும். அல்லாஹ் அழுவதும் இல்லை. சிரிப்பதும் இல்லை. ஆனால் அன்பான உரையாடலின் போது மற்றும் அன்பான சொற்களில் இந்த விஷயங்கள் வந்து விடுகின்றன. ஹதீஸிலும் இவ்வாறே வருகின்றது. நபித்தோழர் ஒருவர் விருந்தோம்பல் செய்த போது அல்லாஹ் அவரது செயலால் மகிழ்ச்சி அடைந்தான். சிரித்தான்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நான் கூறுகின்றேன். இறைவனால் அழுவது சாத்தியம் என்றால் மேலும் இறைவனால் சிரிப்பது சாத்தியம் என்றால் பிறகு எந்த சமயத்தில் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் நான் உம்மை உலகை சீர்திருத்துவதற்காக நிறுத்தியுள்ளேன் என்று கூறினானோ அப்போதே அவர்கள் உடனடியாக எழுந்து நின்றார்கள். இந்த பணி என்னால் நடக்குமா ? என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை. அந்த சமயத்தில் இறைவன் அழுவது சாத்தியமாக இருந்திருந்தால் நான் உறுதியாக அறிந்திருக்கின்றேன். இறைவன் அழுதிருப்பான். அவ்வாறே இறைவன் சிரிப்பது சாத்தியமாக இருந்திருந்தால் அவன் நிச்சயமாக சிரித்திருப்பான். முழு உலகிற்கும் எதிரில் ஒரு பலகீனமான எவ்வித சக்தியுமற்ற மனிதர் இப்படிப்பட்ட முட்டாள்தனமான வாதத்தை செய்கின்றாரே என்று எண்ணி இத்தகைய ஓர் அன்பின் உணர்வை தன்னந்தனியாக இருக்கின்ற அவரது ஆன்மா இறைவனுக்கு வெளிப்படுத்தி இருக்கின்றதே என்பதைப் பார்த்து அந்த இறைவன் அழுதிருப்பான். இந்த உண்மையான நட்பு தான் இறைவன் ஏற்றுக் கொண்ட நட்பாக இருந்தது. உண்மையான நட்பு இப்படித்தான் இருக்கும். அது உலகிலும் பயன்தரக்கூடியதாக இருக்கும்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நான் கூறிய ஓர் ஏழையும், பணக்காரரும் வைத்திருந்த நட்பைப் பற்றி கூறினார்கள். பிறகு கூறினார்கள். உலகின் மொழியில் இது நட்பிற்கான மிகச்சிறந்த மகத்தான உதாரணமாகும். அதை நான் முதலிலேயே விளக்கிக் கூறிவிட்டேன். மனிதன் அத்தகைய உணர்வுகளைப் பார்த்து தனது உள்ளத்தில் கடுமையான அசைவை உணராமல் இருக்கவே முடியாது. ஆனால், இந்த நட்பின் வெளிப்பாட்டிற்கு எதிரில் நபி தனது இறைவனுக்காக வெளிப்படுத்துகின்ற நட்பை பார்க்கும் போது இந்த நட்பு ஒன்றுமற்றதாக ஆகிவிடுகின்றது. அங்கு அந்த நபி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் துன்பங்கள் வருகின்றது. அங்கு ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் தியாயகங்கள் செய்ய வேண்டியது வருகின்றது. கஷ்டங்களை சகித்துக் கொள்ள வேண்டியது வருகின்றது. இந்த ஏழை மனிதர் அந்த பணக்கார மனிதருக்கு கூறிய பதிலைப் போன்றே நபிமார்கள் தங்களது இறைவனிடம் கூறும் பதில் அமைந்திருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அதைவிட சிறந்த பதிலையே அவர்கள் கூறுகின்றனர். சந்தேகமின்றி அறிவார்ந்த பார்வையில் அதை பார்த்தால் தர்க்க ரீதியாக அதைப்பற்றி சிந்தித்தால் அந்த ஏழை மனிதனின் இந்த செயல் நகைப்பிற்குரியதாக தென்படுகின்றது.

ஏனென்றால் அந்த பணக்காரருக்கு ஆயிரக்கணக்கான வேலை ஆட்கள் இருந்தனர். அவ்வாறிருக்க அந்த ஏழை மனிதரின் மனைவி வந்து அதிகப்படியாக எந்த தொண்டை செய்து விடப்போகிறார். அந்த பணக்காரர் லட்சங்களுக்கு எஜமானராக இருக்கின்றார். 100 அல்லது 150 ரூபாயிலுள்ள பணப்பை அவருக்கு எந்த பயனைத் தரப்போகின்றது? அந்த பணக்காரருக்கு சுயமே பல காவலாளிகளும் பாதுகாப்பில் இருப்பவர்களும் இருந்தனர். அவருக்கு அவரது நண்பரின் வாள் என்ன பயனைத் தரப்போகின்றது? ஆனால் அன்பின் வேகத்தின் காரணமாக எனது வாள் என்ன பணியை செய்யப் போகிறது? என்னிடமுள்ள சிறிய தொகை என்ன பயனைத் தரப்போகிறது? எனது மனைவியால் எந்த தொண்டை செய்ய முடியும்? என்பதையெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. என்னிடம் எது இருக்கின்றதோ அதை நான் கொடுத்து விட வேண்டும் என்று மட்டுமே அவர் சிந்தித்தார். எனவே எப்போது அன்பின் வேகம் அளவு கடந்து எழுகின்றதோ அந்த சமயத்தில் அறிவு வேலை செய்வதில்லை. அன்பு அறிவை ஒருபுறம் தூக்கி எறிந்து விடுகின்றது. அன்பு கவலையை ஒருபுறம் தூக்கி எறிந்து விடுகின்றது. பிறகு அன்பு தானே முன்னால் வந்து விடுகின்றது. கழுகு கோழிக் குஞ்சிகளை தாக்கும் போது கோழி தனது குஞ்சிகளை ஒன்று சேர்த்து தனது சிறகிற்குள் அதை மறைத்து விடுகின்றது. சில நேரங்களில் அன்பு எத்தகைய செயல்களையெல்லாம் செய்ய வைக்கின்றதென்றால் உலகம் அதனை முட்டாள்தனமான செயல்கள் என்று கூறுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் அந்த பைத்தியக்காரத் தனமானது உலகிலுள்ள எல்லா அறிவுகளை விடவும் அதிகம் விலை மதிப்புள்ளதாகும். உலகிலுள்ள எல்லா அறிவுகளையும் அந்தவொரு பைத்தியக்காரத்தனமான செயலுக்காக நாம் தியாகம் செய்து விடலாம். ஏனென்றால் அன்பின் மூலமாக உருவாகுவது தான் உண்மையான அறிவாகும். இது நினைவில் கொள்ள வேண்டிய விஷயமாகும். அன்பினால் உருவாகுவதே உண்மையான அறிவாகும். நபிக்கும் கூட இறைவனின் குரலே வருகின்றது. விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவன், மதிப்பையும் மரியாதையையும் உருவாக்குகின்ற இறைவன், அரசர்களை பிச்சைக்காரர்களாகவும், பிச்சைக்–காரர்களை அரசர்களாகவும் உருவாக்குகின்ற இறைவன், அரசாங்கங்களை நிலைநிறுத்துகின்ற மற்றும் அரசாங்கங்களை அழிக்கின்ற இறைவன், செல்வங்களை வழங்குகின்ற மற்றும் செல்வங்களை வாங்கிக் கொள்கின்ற இறைவன், ரிஸ்க்கை வழங்குகின்ற மற்றும் ரிஸ்க்கை பறிக்கின்ற இறைவன், விண்ணிலும் மண்ணிலுமுள்ள ஒவ்வொரு அணுக்கள் மற்றும் பிரபஞ்சத்தின் எஜமானனான அந்த இறைவன் அந்த நபியை குரல் கொடுத்து அழைக்கின்றான். ஒரு பலகீனமான, எவ்வித சக்தியுமற்ற, எதையும் செய்ய இயலாத அந்த மனிதனிடம் நான் உதவியின் தேவையுடையவனாக இருக்கின்றேன். எனக்கு நீர் உதவி செய்வீராக என்று அந்த இறைவன் கூறும் போது அந்த பலகீனமான, சக்தியற்ற அடியான் அறிவை பயன்படுத்துவதில்லை. அவர், இறைவா! நீ என்ன சொல்கின்றாய்? உதவி செய்யப்படுவதற்கு தேவையுடையவனாக நீயா இருக்கின்றாய்? இறைவா! வானம் மற்றும் பூமியின் அரசனாக நீ இருக்கின்றாய். நான் ஒன்றுமற்றவனாகவும், ஏழையாகவும், பலகீனமானவனாகவும் இருக்கின்றேன். என்னால் உனக்கு என்ன உதவி செய்ய முடியும்? என்று அந்த நபி கேட்பதில்லை. மாறாக, தனது பலகீனமான, எதுவும் செய்ய இயலாத உடலை எடுத்துக் கொண்டு அவர் நிற்கின்றார். நான் வந்து விட்டேன். நான் வந்து விட்டேன். நான் வந்து விட்டேன் என்று கூறுகின்றார். எவருக்கு அன்பின் இனிமையிலிருந்து ஒரு சிறிய பங்கு கிடைத்துள்ளதோ அவரைத் தவிர வேறு எவரால் இந்த உணர்வுகளிலுள்ள ஆழத்தை கணித்துக் கூற முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள். இன்றிலிருந்து 50 வருடங்களுக்கு முன்னால் (அதாவது இன்றிலிருந்து 126 வருடத்திற்கு முன்னால்) அதே இறைவன் தான் மீண்டும் இந்த குரலை எழுப்பினான். காதியானில் தனிமையாக ஒரு மூலையில் கிடந்த ஒரு மனிதரிடம் எனக்கு உனது உதவி தேவைப்படுகிறது. நான் உலகில் இழிவுபடுத்தப்–பட்டுள்ளேன். எனக்கு உலகில் எந்த மதிப்பும் இல்லை. உலகில் எனது பெயரைக் கூறுபவர் எவரும் இல்லை. எனக்கு நண்பர்களோ, உதவி செய்பவர்களோ எவரும் இல்லை. என் அடியாரே! எனக்கு உதவி செய் என்று அவன் கூறினான். அந்த அடியாரோ இதனை சொல்பவன் யார் என்று சிந்திக்கவில்லை. எவன் பேசுகின்றானோ அல்லது எவரோடு பேசப்படுகின்றதோ அவர் யார்? என்பதைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. அவரது அறிவு என்னை அழைப்பவனிடம் எல்லா ஆற்றல்களும் இருக்கின்றன. நான் அவனுக்கு என்ன உதவி செய்ய முடியும் என்று கூறவில்லை. அந்த இறைவன் மீதுள்ள அன்பு அவரது உள்ளத்தில் ஒரு நெருப்பை மூட்டி விட்டது. அதாவது இறைவனுடைய தூதுச் செய்தி கிடைத்த போது இறைவன் மீதுள்ள அன்பு ஒரு நெருப்பை மூட்டி விட்டது. அவர் பைத்தியக்காரரைப் போன்று எந்தவொரு பொருளும் இல்லாமல் உணர்வுடன் எழுந்து நின்று விட்டார். என் இறைவா! நான் வந்து விட்டேன். என் இறைவா! நான் வந்து விட்டேன். மார்க்கம் அழிவதிலிருந்தும் அதை நான் பாதுகாப்பேன். அதை நான் பாதுகாப்பேன் என்று அவர் கூற ஆரம்பித்தார். (அல் ஃபஸ்ல் 25 ஜனவரி 1940 தொகுதி 28, எண்.15, பக்கம் 8-10)

எனவே, இன்று நாம் அல்லாஹ்வின் அன்பில் தன்னை மாய்த்து கொண்ட ஒரு நபரை மற்றும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதாக உடன்படிக்கை எடுத்துக் கொண்டு நிற்கின்ற ஒரு மனிதரை ஏற்றுக் கொண்டதாக நாம் வாதம் செய்கின்றோம். இன்று நாம் அல்லாஹ்விற்கு பிரியமான நபியான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது உண்மையான அடியாரிடம் பைஅத் செய்திருப்பதாக வாதம் செய்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையினால் அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறி இருப்பதாக நாம் இன்று கருதுகின்றோம் என்றால் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறி இருக்கிறது. இஸ்லாம் தனது மறுமலர்ச்சியின் காலகட்டத்தில் நுழைந்திருக்கின்றது. இப்போது இஸ்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே உலகின் மூலை முடுக்களிலெல்லாம் பரவும் என்று நாம் கருதுவதாக இருந்தால் மேலும் நாம் ஹுஸூர் (அலை) அவர்களிடம் பைஅத் உடன்படிக்கை செய்திருப்பது அவர்களது பணியில் அவர்கஉஒளுக்கு உதவி செய்பவர்களாக நாம் ஆகுவோம் என்பதற்காகத் தான் என்றால் பிறகு நாம் நம்மிடம் இருக்கின்ற நமது எல்லா ஆற்றல்களுடன் அவை குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் ஹுஸூர் (அலை) அவர்களது குரலுக்கு செவிசாய்த்தவாறு லெப்பைக் என்று கூறியவாறு முன்னால் வர வேண்டும். நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். இறைவனிடமும் அவனது தூதரிடமும், அவனது மஸீஹிடமும் நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். நமது நிலைமைகளில் தூய மாற்றங்களை உருவாக்க வேண்டும். நமது நன்றியுணர்வின் தரத்தை உயர்த்த வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு தியாகம் செய்யவும் அந்த ஏழை நண்பர் தனது பணக்கார நண்பருக்காக தயாராக இருந்தது போன்று தயாராக இருக்க வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக.

---

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 31 March 2016 | Issue No. 4

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பு - ஒரு மகத்தான விண்ணின் அடையாளமாகும். அதன் பின்னணி, மகத்துவம் மற்றும் முக்கியத்துவம்

- இஹ்ஸானுல்லாஹ் தானிஷ் - ஜமாஅத்தின் முரப்பி

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இஸ்லாத்தின் எதிரிகளுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர்களது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு அடையாளம் காட்டுவதாக வாக்குறுதி அளித்திருப்பதே போதுமானதாகும். ஆனால் பகைமையும் காழ்ப்புணர்ச்சியும் அவர்களது கண்களைக் கட்டிப் போட்டு விட்டது. பரிகாசம் செய்வதும் பகைமையும் மனிதனை நிம்மதியாக இருக்க விடாது. ஒரு கடுமையான இஸ்லாத்தின் எதிரி உண்மையை மறைப்பதற்காகவும் பரிகாசம் செய்வதற்காகவும் முன்வந்தார். அவர் பெஷாவரைச் சார்ந்த பண்டிட் லேக்ராம் ஆவார். இவர் இதற்கு முன்னரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸ) அவர்களுக்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் தீய சொற்களைக் கூறுவதில் பிரபலமாக இருந்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1885 ஆம் ஆண்டு முஸ்லிம் அல்லாதவர்களிடம் அடையாளத்தைக் காட்டுவதாகக் கூறி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அப்போது 1885 ஆம் ஆண்டின் இறுதியில் லேக்ராம் அடையாளத்தைக் காண்பதற்காக காதியான் வந்திருந்தார். ஆனால் சில நாட்கள் வரை எதிரிகளிடம் தங்கி இருந்து விட்டு தீய சொற்களைக் கூறி விட்டு திரும்பிச் சென்று விட்டார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மீண்டும் மீண்டும் அடையாளத்தைக் காட்டும்படி கேட்டுக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று ஓர் அசாதாரணமான தனிச்சிறப்புமிக்க பண்புகளை உடைய ஒரு மகத்தான ஈடிணையற்ற மகன் தனக்கு பிறப்பது தொடர்பான முன்னறிவிப்பைச் செய்தார்கள். அந்த மகன் ஹுஸூர் (அலை) அவர்களின் சந்ததிகளிலிருந்து மற்றும் அன்னாரது தலைமுறையில் தோன்றக் கூடியவராக இருப்பார் என்று முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த மகன் தொடர்பான இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று அவர் 9 வருடங்களுக்குள் பிறப்பார் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். அவரது தூய வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் இஸ்லாத்தின் உண்மைக்கான ஆதாரமாக இருக்கும். அந்த சமயத்தில் இறையச்சத்துடன் செயல்பட்டவாறு கண்ணியமாக நடந்து கொள்வதற்குப் பகரமாக லேக்ராம் மிகவும் தரக்குறைவான செயலில் இறங்கினார். இஸ்லாத்தின் உண்மையை வெளிப்படுத்துவதற்கான ஒரு முன்னறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. கண்ணியமாக நடந்து கொள்வதும் உண்மையை விரும்புவதும் எதிர்பார்ப்பது என்னவென்றால் இறைவன் எந்தப் பிரிவின் உண்மையை வெளிப்படுத்துகின்றான் என்பதற்காக காத்திருக்க வேண்டும். ஆனால், லேக்ராம் அவசரப்பட்டார். தீர்ப்பு வெளிப்படுவதற்கு முன்பாகவே பரிகாசம் செய்ய ஆரம்பித்தார். வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான முன்னறிவிப்பு நிறைவேறுவது ஒருபுறம் இருக்கட்டும். மிர்ஸா சாஹிபிற்கு எந்த சந்ததிகளும் பிறக்க மாட்டார்கள். மூன்று வருடங்களுக்குள் இப்போது அவருக்கு இருக்கும் சந்ததிகள் கூட இருக்க மாட்டார்கள். மேலும் அவர் சந்ததியற்றவராக இருப்பார் என்று இறைவன் என்னிடம் கூறியுள்ளான் என்று அவர் தமது பிரசுரங்களில் எழுதியிருந்தார்.

இறைவனின் கூற்றுகளுக்கேற்ப 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதி சனிக்கிழமையன்று ஏறக்குறைய இரவு 11.00 மணி அளவில் ஹஸ்ரத் அம்மா ஜான் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்களுக்கு மகத்தான உயர் தகுதியுடைய இந்த மகன் பிறந்தார்கள். மேலும் வாக்களிக்கப்பட்ட மகன் பிறப்பது ஒருபுறமிருக்கட்டும். மிர்ஸா சாஹிபிற்கு எந்த சந்ததிகளும் பிறக்கமாட்டார்கள் என்ற தனது ஷெய்த்தானிய முன்னறிவிப்பு பொய்யானதை லேக்ராம் பார்த்தார். பிறகு லேக்ராம் மிகவும் தரக்குறைவாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி அவர்கள் சந்ததியற்றவராக இருப்பார்கள் என்று கூறினார். இறைவனது தன்மான உணர்வு லேக்ராமை இவ்வாறு பொய்யாக்கியது. எந்த நாளில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பிறப்பு நிகழ்ந்ததோ அதே நாளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனைகளைப் பற்றிய அறிவிப்பை செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தையும் அமைத்தார்கள். இவ்வாறு லேக்ராமின் முன்னறிவிப்பு வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் இரு வகையிலும் பொய்யாக்கி விட்டது.

இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கோடிக்கணக்கான ஆன்மீக சந்ததிகள் உலகில் பரவியுள்ளனர். இன்ன ஷானிஅக ஹுவல் அப்தர் அதாவது நிச்சயமாக உமது சந்ததிகளே சந்ததிகளற்றவர் என்ற இறைவனது இந்த இல்ஹாம் நிறைவேறியது. ஆனால், இது மட்டுமல்ல. அல்லாஹ்வின் விதியானது எதிரிகளுக்கு அவர்கள் அவசரப்பட்டதன் விளைவாகவும் பரிகாசம் செய்ததன் விளைவாகவும் ஓர் இறை கோபத்தின் அடையாளத்தைக் காட்டுவதற்கான ஏற்பாட்டையும் செய்தது. ஆரம்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பண்டிட் லேக்ராம் கூறுவதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்ததற்குக் காரணம் ஆரிய சமுதாயத்தைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய நபர்களுடன் இவ்விஷயம் தொடர்பாக ஏற்கனவே அடையாளம் காட்டப்படும் என்று அவர்கள் கூறியிருந்ததால் ஒரு தனி நபருக்கும் கூட அந்த அடையாளமே போதுமானதாக இருக்க வேண்டும் என்று அன்னார் கருதினார்கள். ஆனால், அதற்குப் பிறகு வெறும் வாய்ச்சொல் வீரராக இருந்த லேக்ராமிடம் இந்து சமுதாயம் தனது எதிர்பார்ப்புகளை வைக்க ஆரம்பித்தது.

(தொடரும்)

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே, நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்று கூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமைமிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும்.

(அல் வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 305-306)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad